சுவாமி கமலாத்மானந்தர்
தலைவர்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
புது நித்தம் சாலை, மதுரை – 625 014.
Phone: 0452- 680224

# செல்வச்செருக்கு

மனிதன் அடிப்படையில் தெய்விகம் வாய்ந்தவன். இந்தக் கருத்தை சுவாமி விவேகானந்தர், "Each Soul is potentially Divine" என்று கூறியுள்ளார்.

‘‘காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ள தொடர்பு போலவே, இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு இருந்துகொண்டிருக்கிறது’’ என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

‘‘காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ள தொடர்பு போலவே, இறைவனுக்கும் மனிதனுக்கும் தொடர்பு இருப்பது உண்மையானால், மனிதர்களை ஏன் இறைவன் கவர்ந்திழுப்பதில்லை?’’ என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழுகிறது.

கனமாக மண் மூடிய ஓர் இரும்புத்துண்டு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த மண் டிய இரும்புத் துண்டைக் காந்தம் இழுக்காது.

அது போல் தீவினைகளாலும், உபாதிகளாலும், அக்ஞானத்தாலும், அகந்தையாலும், மாயையாலும் கனமாக டப்பட்ட ஜீவன், இறைவனுடைய ஆகர்ஷணத்துக்கு உட்படுவதில்லை.

‘‘தேவையான தண்ணீர் விட்டுக் கழுவி மண்ணைப் போக்கிவிட்டால், இரும்பு காந்தத்தால் இழுக்கப்படும். அது போல், ஜீவனை உலகப்பற்றில் ஆழ்த்தும் மாயை என்ற மண்ணை இடைவிடாத பிரார்த்தனையாலும் வணக்கத்தாலும் கசிந்துருகும் கண்ணீராலும் போக்கினால், அந்த ஜீவன் உடனே இறைவனால் கவர்ந்திழுக்கப்படுவான்’’ என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

உலகம் எதையெல்லாம் தன் தலைமீது வைத்துக் கொண்டாடுகிறதோ, மதிக்கிறதோ, போற்றிப் பாராட்டுகிறதோ அவற்றை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் தலைமீது வைத்துக் கொண்டாடியதில்லை, மதித்ததில்லை, போற்றிப் பாராட்டியதில்லை.

ஒரு கையில் மண்ணை எடுத்துக்கொண்டு, மறு கையில் பொன்னை எடுத்துக்கொண்டு, ‘‘மண்ணும் பொன்னும் ஒன்றே’’ என்று சொல்லி, இரண்டையும் கங்கையில் எறிந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மனிதனைப் பந்தப்படுத்த வல்ல உபாதிகளில் செல்வச்செருக்கு என்பதும் ஒன்று.

*ஸ்ரீராமகிருஷ்ணர் தட்சிணேசுவரத்தில் இருந்தபோது, அடிக்கடி அவரைப் பார்க்க ஓர் இளைஞன் வருவது வழக்கம். அவன் பணிவும் அடக்கமும் கொண்டவன்.*

*சில காலமாக அவன் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தரிசிக்க வராமலே இருந்தான். இந்த நிலையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு நாள், தமது உறவினரான ஹிருதய் என்பவருடன் கொன்னகர் என்ற ஊருக்குச் சென்றார்.*

*அங்கே கங்கைக் கரையில் அந்த இளைஞன் காற்று வாங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான், அவன் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்த்ததும், ''என்ன பூஜாரி! சௌக்கியமா?'' என்று ஆணவம் தொனிக்கக் கேட்டான்.*

*அவன் அவ்விதம் கேட்டதும் ஸ்ரீராமகிருஷ்ணர் ஹிருதயிடம், ''இவனுக்கு இப்போது பணம் வந்திருக்கிறது போலிருக்கிறது. அதனால்தான் இப்படிக் கர்வத்துடன் பேசுகிறான்'' என்று கூறினார்.*

*அதைக் கேட்டு ஹிருதய் சிரித்தார்.*

*மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சியில், அந்த இளைஞன் பணக்காரனாக ஆவதற்கு முன்பு பணிவுடையவனாகவும் அடக்கமானவனாகவும் இருந்தான்.*

*அவனுக்குப் பணம் வந்ததோ இல்லையோ, கூடவே கர்வமும் வந்துவிட்டது.*

*மனித வாழ்க்கை நிலையற்றது, இளமை நிலையற்றது, செல்வம் நிலையற்றது.*

*செல்வச்செருக்கு மனிதனைப் பந்தப்படுத்தும் ஓர் உபாதியாகும். ஆதலால் தான், ''ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் பணக்காரன் இறைவனது ராஜ்யத்திற்குள் புக முடியாது" என்று சொல்லப்படுகிறது.*

*ஸ்ரீராமகிருஷ்ணர் தவளையை உதாரணமாகக் கொண்டு இவ்விதம் கூறியுள்ளார்:-*

*ஒரு தவளை தன்னுடைய வளையில் ஒரு ரூபாய் நாணயம் வைத்திருந்தது.*

*ஒரு நாள் ஒரு பெரிய யானை அந்தத் தவளை இருந்த வழியாகச் சென்றது. அதைப் பார்த்த தவளை தன் வளையின் நுழைவாயிலில் நின்றுகொண்டு, ''ஏ யானையே! நான் இருக்கும் இந்த இடத்தின் வழியாகப் போவதற்கு உனக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?" என்று கோபத்துடன் கேட்டபடியே, யானையை உதைக்கப் போவதைப் போல் தன் காலை உயர்த்தியது.*

*தன்னிடம் ஒரு ரூபாய் இருந்ததாலேயே, யானையைப் மிரட்டப் போகும் அளவுக்கு அந்தத் தவளைக்குக் கர்வம் வந்துவிட்டது!*

இது போலத்தான் பலர் தங்களிடம் பணம் இருப்பதாலேயே, தங்கள் உண்மை நிலையை மறந்து கர்வம் கொள்கிறார்கள்.

★ ★ ★

எனவே ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றக் காமம், கோபம், மோகம் போன்று செல்வச்செருக்கும் ஓர் உபாதியே என்று எடுத்துக்காட்டி, அதன் வலையில் சிக்க வேண்டாம் என்று சாதகர்களை எச்சரித்திருக்கிறார்.

செல்வம் பெற்றிருப்பவர்கள், அந்தச் செல்வத்தை இறைவன் தங்களிடம் ஒரு டிரஸ்ட் போல ஒப்படைத்திருக்கிறான் என்று எண்ண வேண்டும். இறைவன் தந்த அந்தச் செல்வத்துக்குத் தாங்கள் ஒரு வாய்க்காலாக இருந்து நற்காரியங்களுக்கு அவர்கள் செலவிட வேண்டும்.

செல்வம் பெற்றிருப்பவர்கள், அதிகாரம் பெற்றிருப்பவர்கள் இறைவனின் ஒரு கருவியாக தங்களைக் கருதி, செல்வச் செருக்கின்றி உலகத்திற்குப் பரோபகாரமாக நடந்துகொள்ள வேண்டும். அதுவே இறைவனின் சங்கல்பமும் விருப்பமும் ஆகும்.

-----------